Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

13.11.2020 வெள்ளிக்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## வெலிக்கடை சிறையில் 12 பேருக்கு தொற்று

கொழும்பு, நவ.13
கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள மேலும் 12 கைதிகளுக்குக்

2





# வீதிகளில் செத்து மடியும் மக்கள்

## கொரோனா காரணமா என மக்கள் அச்சம் விசாரணை தீவிரம் என்கின்றது அரசு

கொழும்பு, நவம்பர் 13

நாட்டில் கொரோனாத் தொற்றால் ஏற்படும் உயிரிழப்புக்கள் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் வீதிகளில் இறந்து கிடக்கும் மனிதர்களின் ஒளிப்படங்களால் மக்கள் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

2



## கொரோனா தடுப்பில் தோல்வி அடையோம்

### இராணுவத் தளபதி திட்டவட்டம்

கொழும்பு, நவ.13
கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் பொறிமுறை தோல்வியடையவில்லை. அவ்வாறு தோல்வியடைய விடவும்மாட்டோம். எந்தவொரு தகவலையும் நாம் மறைக்கவும் இல்லை. இவ்வாறு கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று தெரிவித்துள்ளார்.

2

## "வாரோயோ பஸில்"

### 19 எம்.பிக்கள் கடிதம்

கொழும்பு, நவ.13
ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சகோதரரான பஸில் ராஜபக்சவை நாடாளுமன்ற உறுப்பினராகுமாறு கோரி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இவர்கள் கையொப்பம் இட்டு பஸில் ராஜபக்சவுக்கு கடிதம் ஒன்றும் அனுப்பியுள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான், நிபுண ரணவக்க உட்பட 19 நாடாளுமன்ற உறுப்பினர்

2





## மூன்று சபைகளில் கருகியது மொட்டு!

கொழும்பு, நவ.13
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆளுகையின் கீழுள்ள மூன்று உள்ளூராட்சிச் சபைகளின் வரவு செலவுத் திட்டங்கள் தோற்க

2

## தடுப்பூசியின் வெற்றியை கணிக்கக் காலம் தேவை!

### பேராசிரியர் நீலுகா தெரிவிப்பு

கொழும்பு, நவ.13
ஜேர்மன் மற்றும் அமெரிக்க நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் கொரோனாத் தடுப்பூசி வெற்றியளிக்குமா என்பது தொடர்பில் இப்போது தீர்மானிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகப் பேராசிரியர் நீலுகா மலவிகே

2

## லொக்டவுன் விடுவிப்பு நாளைதான் தீர்மானம்!

கொழும்பு, நவ.13
கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை விடுவிப்பது தொடர்பில் நாளையே முடிவெடுக்கப்படும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது கொரோனா வைரஸ் தாக்கத்

2

## புதினம் தெரியுமோ?

நாளைக்குத் தீபாவளி.வழக்கம் மாதிரி இந்தமுறை பெரிய எழுப்பமா கொண்டாடாமல் வீட்டுக்க இருந்து கொண்டாடச் சொல்லி எல்லாரும் அட்வைஸ் பண்ணுகினம். பகிடி என்னவெண்டால், இப்ப தீபாவளியண்டு சாதாரண ஆக்கள் கோயிலுக்கு போய் கும்பிடுறதை விட , பெண்கள் போறதுதான் கூட. பெரிய ஆக்கள் எண்டில்லாமல் குஞ்சு, குருமன், சின்னன் , பெரிசு எண்டு எல்லாரும் இப்ப கௌரி விரதம் பிடிக்கினம். அந்த

2

## கொரோனாவை எதிர்க்க மனத் தைரியமே மருந்து

கொழும்பு, நவ.13
கொரோனாத் தொற்று ஏற்பட்டால் மனதளவில் தைரியத்துடன் இருக்க வேண்டும். அதுவே கொரோனாத் தொற்றுடன் போராடுவதற்கான சிறந்த ஆயுதம். தொற்றுக்குள்ளாகி கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று

8

## உடல்களின் நல்லடக்கம் அவரவர் கலாசார தேர்வு

### ஐ.நா. அபிவிருத்தி திட்ட பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.13
உயிரிழந்த உடல்களின் தகனம் என்பது அவரவர் கலாசார தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டவை என ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின்

8



# வீதிகளில் செத்து...



வீதிகளில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள் திடீரென வீழ்ந்து உயிரிழக்கும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளன. நாட்டில் கொரோனாத் தொற்று மூன்றாவது அலை வீரியம் பெற்றுள்ள நிலையில், இவ்வாறான இறப்புக்கள் மக்களை அச்சத்துக்குள் தள்ளியுள்ளன. பாணந்துறை, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் வீதிகளில் இறந்து கிடக்கும் மனிதர்களின் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தன.
கொரோனாத் தொற்று அச்சத்தால் அந்த மனிதர்களுக்கு அருகில் சென்று பார்ப்பதற்கு அச்சப்பட்டு மக்கள் தூரத்தே நின்று வேடிக்கை பார்க்கும் நிலைமையும் காணப்படுகின்றது.
சடுதியாக அதிகரித்துள்ள இவ்வாறான உயிழப்புகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக இருக்கலாம் என்று மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆனால் சுகாதார அமைச்சு இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை.
இவ்வாறான உயிரிழப்புக்கள் தொடர்பாக அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார, "இந்த இறப்புக்கள் தொடர்பாகத் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. இது கொரோனா வைரஸால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் என்று கருதமுடியாது" என்று கூறியிருந்தார். ஆனால் அதற்குப் பின்னரும் இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் மக்கள் பெரும் அச்சத்துக்கு ஆளாகியுள்ளனர். (எ-22)

## "வாரோயோ...

கள் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.
அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு உயிர் கொடுத்து, கிராம கிளைச் சங்கங்கள் முதல் கட்சியின் உயர்மட்டம் வரை சகல நடவடிக்கைகளையும் நீங்களே ஒருங்கிணைத்தீர்கள். கட்சியின் ஸ்தாபகரான நீங்கள் நாடாளுமன்றத்தில் இல்லை.
நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான ஆலோசனைக்காகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை நாட்டுக்கு வழங்கவும் உங்களது நாடாளுமன்ற வருகை அத்தியவசியமானது என நாங்கள் நம்புகிறோம்.
அதனால் மிக விரைவில் நாடாளுமன்றத்துக்கு வருமாறு கோருகின்றோம் என்று தெரிவித்துள்ளனர்.
19ஆம் திருத்தத்துக்கு அமைய இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக முடியாது. கோத்தாபய அரசு நிறைவேற்றியுள்ள 20ஆவது திருத்தத்தில் அது நீக்கப்பட்டுள்ளது. இரட்டைக் குடியுரிமை கொண்ட பஸில் ராஜபக்சவை நாடாளுமன்ற உறுப்பினராக்கவே அரசு இந்த ஏற்பாட்டை மேற்கொண்டது என்று பேசப்படும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (எ-இ)

## கொரோனா தடுப்பில்...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்பான தகவல்களை நாம் மறைக்கவில்லை. பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைத்தவுடன் ஊடகங்கள் வாயிலாக அவற்றை வெளிப்படுத்தி வருகின்றோம். சிலவேளை தாமதம் ஏற்பட்டால்கூட அங்கு ஒளிவு மறைவு என்பதற்கு இடமிருக்காது. இலங்கையில் திறமையான ஊடகவியலாளர்கள் இருப்பதால் அவ்வாறு எதனையும் மறைக்கவும் முடியாது.
கொரோனா வைரஸ் பரவலை ஆரம்பம் முதலே சிறப்பான முறையில் கட்டுப்படுத்திவருகின்றோம். நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றையும் கருத்திற்கொண்டே தற்போது செயற்படுகின்றோம்.
மினுவாங்கொட கொத்தணி 3 ஆயிரத்து 100 என்ற எண்ணிக்கையுடன் கட்டுக்குள் வந்துள்ளது. பேலியகொட கொத்தணி பரவல்தான் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வியாபித்தது. அதனையும் கட்டுப்படுத்தி வருகின்றோம். எனவே, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான எமது செயன்முறை 'பெயில்' இல்லை (தோல்வி அடையவில்லை). என்றும் நாம் பெயில் அடைந்தது இல்லை. அடையவும் மாட்டோம்.
நாட்டில் சிறந்த தலைவர் இருக்கிறார். அரசாங்கமொன்று இருக்கின்றது. செயலணி இருக்கின்றது. ஓய்வுபெற்ற அதேபோல வெளிநாட்டில் இருக்கும் வைத்தியர்கள் ஒத்துழைப்புகளை வழங்கிவருகின்றனர். எனவே, நாம் தோல்வியடையமாட்டோம்.என்றார்.(எ-44)

## வெலிக்கடை...

கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வெலிகடைச் சிறையில் இது வரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 172 ஆக அதிகரித்துள்ளது என்று சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.(எ-இ)

## தடுப்பூசியின்....

தெரிவித்துள்ளார்.
தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
சாதாரணமாக தடுப்பூசி ஒன்றைத் தயாரிப்பதற்கு 5 6 வருடங்களாகும். சில நேரங்களில் 10 வருடங்களாகும். இந்த பரிசோதனையை 2 மாதங்கள் கூட செய்யவில்லை. 2 மாத தரவுகளில் எங்களால் உறுதியான தீர்மானத்துக்கு வர முடியாது. குறைந்த பட்சம் 2 3 வருடங்களாவது ஆய்வு செய்த பின்னர் இந்த தடுப்பூசி வெற்றிளிக்குமா? இல்லையா? என்பதையும், அது எவ்வளவு பாதுகாப்பானது என்பதையும் அனுமானிக்க முடியும்.
அந்தத் தடுப்பூசியை 10 பேருக்கு வழங்கும் போது அதில் 9 பேரை கொரோனா தொற்றாமல் பாதுகாக்க முடியும் எனக் கூறியே அவசர அனுமதி பெற முன்வைக்கப்பட்டுள்ளது.
தற்போது அந்தத் தடுப்பூசி 43 ஆயிரத்து 500 பேருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், எவருக்கும் உபாதைகள் ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது.
தடுப்பூசி மூலம் கொரோனா வைரஸ் தொற்றுடன் போராடுவதற்கு மனிதனின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி கட்டமைப்புக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. இந்த புதிய தடுப்பூசி ஆர்.என்.ஏ. தடுப்பூசி வகையைச் சேர்ந்ததாகும். வைரஸின் சிறிய மரபணு குறியீடுகள் தடுப்பூசிக்கு பயன்படுத்தப்படுகின்றன.
தடுப்பூசி செலுத்தப்படும்போது, வைரஸ் மனித உடலில் உருவாக்கப்பட்டு, உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு அதை ஒரு வெளிப்புறப் பொருளாக உணர்ந்து அதை எதிர்த்துப் போராடத் தொடங்குகிறது.
தடுப்பூசி இரண்டு அளவுகளில் கொடுக்கப்படுகிறது. முதல் தடவை வழங்கிய, மூன்று வாரங்களுக்குப் பின்னர் இரண்டாவது தடவை வழங்கப்படும். அதைப் பெற்ற 90 சதவீத மக்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகளை உருவாக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. எப்படியிருப்பினும் இதுவரையில் ஆர்.என்.ஏ. தடுப்பூசிகளை மனித பயன்பாட்டுக்குப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படவில்லை. என்றார். (எ-இ)

## லொக்டவுன் விடுவிப்பு...

தையடுத்து தனிமைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை விடுவிப்பது தொடர்பான மீளாய்வுக்கூட்டம் நாளை நடைபெறும். அதில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள, வைரஸ் பரவும் அபாயம் நீங்கியுள்ள பகுதிகளை விடுவிக்கும் முடிவு எடுக்கப்படும். தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை நாடு முழுவதும் பிறப்பிப்பதற்கோ அல்லது மேலும் பல பகுதிகளை தனிமைப்படுத்துவதற்கோ நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் மக்களின் செயற்பாடுகளில்தான் அடுத்தக்கட்ட முடிவுகள் தங்கியுள்ளன.
மேல் மாகாணத்தில் உள்ள பயணக்கட்டுப்பாட்டை 15 ஆம் திகதி நள்ளிரவுடன் தளர்த்துவதற்கு எதிர்ப்பார்க்கின்றோம். அதை நீடிக்கும் எண்ணம் இல்லை. ஆனால் அடுத்துவரும் 48 மணிநேரத்தில் நிலைமை எவ்வாறு உள்ளது என்பதை அடிப்படையாகக்கொண்டு முடிவுகள் மாறலாம். என்றார். (எ-44)

### புதினம் தெரியுமோ?

**விரதம் காப்புக் கட்டுறதோட முடிவுக்கு வரும்.. தீபாவளியண்டுதான் காப்புக் கட்டுறது. ஆனா சிக்கல் என்னெண்டா கோயிலுக்கு 5 பேர் மட்டும் தான் கும்பிட அனுமதி. அதால இந்தமுறை கௌரிவிரதம் குழம்பப் போகுதே எண்டது கனபேரின்ர ஆதங்கம்.**
**அதுக்கு சில கோயில்கள் பொருத்தமான வழியளைக் கண்டு பிடிச்சிருக்கினம். ஒரு கோயிலில முதலே விரதம் இருக்கிற ஆக்களின்ர பெயர், விலாசம், நூல் காசு எல்லாம் வாங்கிட்டினம்.**
**நாளைக்கு பூசை முடிய நூல், விபூதி,பிரசாதம் எல்லாம் ஒரு பையில போட்டு அவரவர் சொந்த வீட்டில கொண்டு போய் குடுக்கப் போகினம் நிலைமையறிஞ்சு வழிபாட்டில அதுக்கேத்த மாற்றம் கொண்டுவாறவையை கட்டாயம் பாராட்ட வேணும். வீம்புக்கு நிண்டு கொரோனாவைக் கூப்பிடாமல், இப்பிடி நிலைமை அறிஞ்சு நடக்கிறதுதான் கெட்டித்தனம்.**
**-பட்சி**

## மூன்று...

டிக்கப்பட்டுள்ளன.
அம்பாறை நகரசபை, ஜா எல பிரதேச சபை, மற்றும் ஹல்து முல்ல பிரதேச சபை ஆகியவற்றின் வரவு செலவுத் திட்டங்களே தோற்கடிக்கப்பட்டுள்ளன.
அம்பாறை நகரசபையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் 9 பேரும் , ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் நால்வரும், சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் மூவரும், ஜே.வி.பியின் உறுப்பினர் ஒருவரும், சுயேட்சைக்குழு உறுப்பினர் ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர்.
இந்தச் சபையின் ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அறுவர் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்துள்ளனர். ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் மூவர் ஆதரவாக வாக்களித்த போதிலும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்ததால் பாதீடு தோல்விகண்டது. ஆதரவாக 6 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.
47 உறுப்பினர்களைக்கொண்ட ஜா எல பிரதேச சபையின் ஆட்சி அதிகாரமும் மொட்டுக் கட்சியின் கீழ்தான் இருக்கின்றது. மொட்டு கட்சி உறுப்பினர்கள் 23 பேரில் நால்வர் எதிராக வாக்களித்ததால் பட்ஜெட் தோல்வி கண்டது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 18 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டன.
அதேபோல ஹல்துமுல்ல பிரதேச சபையின் பட்ஜெட் டும் தோல்வியடைந்துள்ளது. ஆதரவாக மூவர் மட்டுமே வாக்களித்துள்ளனர். (எ-44)



## காணிக்கு விண்ணப்பிக்க இளையோர்கள் ஆர்வம்!

வவுனியா, நவ.13

இளம் தொழில் முனைவோருக்கான இலவச காணித் துண்டுகள் வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற நேற்றுப் பலரும் முண்டியடித்தனர்.

அதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 15ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து இன்று காலை தொடக்கம் மதியம் வரையிலான காலப்பகுதியில் 300க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப் படிவங்களை ஒப்படைப்பதற்காக வவுனியா பிரதேச செயலகத்துக்கு வந்திருந்தனர்.

கொரோனாத் தொற்று நிலைமையா லும், மக்களின் அசௌகரியங்களை குறைக்கும் வகையிலும் வவுனியா பிரதேச செயலக ஊழியர்கள் செய லக வாயிலில் நின்று இலவச விண் ணப்படிவங்களை வழங்கியதுடன், நிரப்பட்ட விண்ணப்படி வங்களை யும் பெற்றுக் கொண்டனர். (எ-18)

# ரிஷாத்துக்கு கிடுக்கிப்பிடி



### பிணை மனு நிராகரிப்பு 25வரை மறியல் நீடிப்பு

கொழும்பு, நவ.13

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்த பிணை மனு, கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன் றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அவரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது அரச நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தி பஸ்கள் மூலம் புத்தளத்தில் இருந்து மன்னாருக்கு வாக்காளர் களை அழைத்துச் சென்றார் என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ரிஷாத் பதியுதீன் ஒக் ரோபர் 19 ஆம் திகதி தெஹிவளை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தன்னைப் பிணையில் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி கடந்த மாதம் 27 ஆம் திகதி மனுவொன்றை ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்திருந்த நிலையில் அந்த மனு நீதிமன் றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று இன்றும் அவரால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டதுடன் அந்த மனுவும் நீதிமன்றத்தால் நிரா கரிக்கப்பட்டுள்ளது. (எ-22)

## கிழக்கில் இதுவரை 112 பேருக்கு தொற்று

கொழும்பு, நவ.13

மட்டக்களப்பு மாவட்டம் வாகரை பகுதி யில் கொரோனா வைரஸ் தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.லதாகரன் தெரி வித்துள் ளார். அதையடுத்துக் கிழக்கு மாகா ணத்தில் கொரோனாத் தொற்றுக் குள்ளானவர்களின் எண்ணிக்கை 112 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் இதுவரை யில் கொரோனாத் தொற்றுக்குள்ளான வர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 724 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)



## சிறையிலுள்ள எம்.பிக்கள் சபைக்கு வருவதற்குத் தடை

கொழும்பு, நவ.13

சிறைச்சாலைகளில் தற்போது கொரோனாத் தொற்று ஏற்பட் டுள்ள நிலையில், வெலிக்கடை மற்றும் மெகஸின் சிறைகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் களை சபை நடவடிக்கைகளுக்கு அழைத்து வருவது நிறுத்தப்பட் டுள்ளது.

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன், பிரேமலால் ஜய சேகர மற்றும் எதிர்க்கட்சி நாடா ளுமன்ற உறுப்பினரான ரிஷாட் பதியுதீன் ஆகியோரையே சபைக் குள் அழைத்து வராமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.(எ-இ)

## வடக்கு, கிழக்குக்குப் பாரபட்சம் இல்லை என்பதை தமிழரும் ஏற்பு

*கூறுகின்றார் டிலான் பெரேரா*

கொழும்பு, நவ.13

அரசு தெற்குக்குக் கொடுக்கும் முன்னுரிமை வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கும் கொடுக்கின் றது என்பதை தமிழ் தரப்புகளும் ஏற்றுக்கொண்டுள்ளன என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனாவுக்கு மதம், இனம் எதுவும் தெரியாது. அனைவரை யும் கொரோனா பீடிக்கின்றது. எனவே சகல மக்களையும் இந்த வைரஸ் தாக்கத்திலிருந்து மீட் டெடுக்க சகலரும் இணைந்து கடமையாற்றுவோம். இதில் தவறுகள் விடப்பட்டால் அதைச் சுட்டிக்காட்டுங்கள், நாம் அதைத் திருத்திக்கொள்கிறோம். ஆனால் அரசை விமர்சிப்பதாக நினைத்து நாட்டை நெருக்கடிக் குள் தள்ளிவிட வேண்டாம்.

நாட்டில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெ டுத்து வருகின்றது. இதில் பாதிக் கப்பட்ட சகலருக்கும் நிவாரணங் களை வழங்க அரசாங்கம் நடவ டிக்கை எடுத்துள்ளது.

இதில் தெற்குக்குக் கொடுக்கும் முன்னுரிமை வடக்கு கிழக்கிக்கும் கொடுக்கப்படு கிறன. அந்தவகையில் வடக்கு கிழக்குக்கு அபிவிருத்திகள் செய்யப்படுகின்றது, மருத்துவம னைகள் உருவாக்கப்படுகின்றன. இந்த அபிவிருத்திகள் அவர்களின் கண்களுக்குத் தெரிகின்றது -என் றார். (ற-இ)

## சினிமா பாணியில் தப்பிக்க முயன்றவர்கள் மீளக் கைது!



கொழும்பு, நவ.13

சினிமா பாணியில் சிறையில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்த 8 பெண் கைதிகள் மீளவும் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப் பட்டனர்.

இந்தச் சம்பவம் குருவிட்ட சிறைச் சாலையில் நடந்துள்ளது.

சிறைச்சாலை பெண் உத்தியோகத் தர்கள் இரண்டு பேரைத் தாக்கி அவர்களை கட்டிப் போட்டுவிட் டுப் இக் கைதிகள் தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். இவர்கள் எட்டுப் பேரும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து குருவிட்ட சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ள னர். ஆனால் இவர்களின் தப்பிக்கும் திட்டம் பிசுபிசுத்துப் போனதை அடுத்து, அவர்கள் சிறை அதிகாரிக ளால் மீண்டும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான சிறைச் சாலை பெண் உத்தியோகத்தர்கள் இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள னர். (எ-இ)

# நல்லாட்சியின் அழிவுப் பாதையை மாற்றுவதே பட்ஜெட்டின் நோக்கம்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் காணப்பட்ட சமூகப் பொருளாதார அழிவுப் பாதையை மாற்றியப்பதே, அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட கொள்கையின் உள்ளடக்கம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 2020 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டுச் சட்ட மூலத்தை சபையில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நான்கு இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்குகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுச் சட்டமாகவே இது சமர்ப்பிக்கப்படுகின்றது. கடன் பீதியை வெறுமனே நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கும் புதிய தாராளவாதக் கொள்கைகளை நியாயப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட உபாய வழிகளாக நாம் நன்கு புரிந்து கொண்டமையால் எம்மால் இதனைச் செய்ய முடிந்தது. ஒட்டு மொத்தக் கடனை 75 சதவீதத்துக்கு அடுத்து வரக் கூடிய 4 வருட காலப்பகுதியில் குறைப்பதும் எமது அரசாங்கத்தின் பொறுப்பாகும். மூன்றாவது அலையின் உயிர் இழப்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் எம்மைக் காட்டிலும் முன்னணியிலுள்ள பெரும்பாலான நாடுகளுடன் ஒப்பிடும் போது இறப்பு வீதம் 0.3% சதவீதமாகும் எனத் தெரிவித்தார். (வ-இ)



# தந்தையும் தனயனும் துப்பாக்கிகளுடன் கைது

திருகோணமலை, நவ.13

துப்பாக்கிகள் மூன்றுடன் தந்தையும் மகனும் கைது செய்யப்பட்ட சம்பவம் மூதூர் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சாபி நகர் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. மூதூர் விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உள்ளூர் துப்பாக்கிகள் மூன்று மீட்கப்பட்டுள்ளன. இதையடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் மூதூர் பகுதியைச் சேர்ந்த 59,மற்றும் 19 வயதுடைய தந்தையும் மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களை மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# போக்குவரத்துத்துறையின் வருமானம் கடும் வீழ்ச்சி

கொழும்பு, நவ.13

கொரோனாப் பரவலைத் தடுக்கும் முகமாக நாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் மற்றும் சுகாதார நடைமுறைகள் காரணமாக போக்குவரத்துத் துறையில் வருமானம் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதன்படி, இலங்கை போக்குவரத்து சபையின் நாளாந்த வருமானம் 75 மில்லியன் ரூபாவில் இருந்து 18 மில்லியன் ரூபா வரை குறைந்துள்ளது. ரயில்வே திணைக்களத்தின் வருமானம் 18 மில்லியன் ரூபாவில் இருந்து ஐந்து மில்லியன் ரூபா வரை வீழ்ச்சி கண்டுள்ளது. (வ-இ)

# தனிமைப்படுத்தலில் 17,708 வீடுகள்

கொழும்பு, நவ.13

மேல் மாகாணத்தில் 17 ஆயிரத்து 708 வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார். வீடுகளில் தனிமைப்படுத்தியுள்ளவர்களைக் கண்காணிப்பதற்காக விஷேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேல்மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 23 பொலிஸ் பிரிவிலும் மக்கள் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கு இன்றும் ஆளில்லா விமானங்களும், உலங்குவானூர்திகளும் பயன்படுத்தப்படவுள்ளன. அத்துடன் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# கொரோனாத் தொற்று பரவலில் தீர்மானமிக்க தருணத்தில் நாடு

## மருத்துவர் பத்மா குணரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

கொரோனா வைரஸ் பரவல் நிலைமைகளுக்கு மத்தியில் இலங்கை மிக தீர்மானமிக்க தருணத்தில் உள்ளது என விசேட மனோ மருத்துவர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார். இலங்கை மருத்துவர் சங்கத்தால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டைத் திறந்துவைத்துக்கொண்டு நோயைக் கட்டுப்படுத்தும் முறையையே இலங்கை பின்பற்றி வருகின்றது. நோயிலிருந்து பாதுகாப்பு பெற அவசியமான அறிவுரைகள் மக்களை சரியாகச் சென்றடைகின்றனவா? மக்களுக்குச் சுகாதார துறை மீதான நம்பிக்கை அற்றுப்போயுள்ளதா என்பது தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும். இலங்கையின் தற்போதைய மரண சதவீதம் 2.7 ஆக காணப்படுகின்றது. கொரோனா பரவும் விதத்தை கண்டு மக்கள் அச்சப்படுகின்றனர். தொற்றுக்குள்ளாகுவோரில் நியூமோனியா, மற்றைய நோய்களில் பீடிக்கப்பட்டுள்ளமை, வயது எல்லை என்பதை பொறுத்தே இந்த நோயத் தாக்கம் அதிகரிக்கின்றது எனத் தெரிவித்தார். (வ-இ)



# மழைக்கு சாத்தியம்

கொழும்பு, நவ.13

நாட்டில் பல இடங்களில் பி.ப. ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

புத்தளத்திலிருந்து மன்னார், காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு அல்லது கிழக்கு திசையிலிருந்து வீசுவதுடன் நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் மாறுபட்ட திசைகளிலிருந்தும் காற்று வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 2030 கிலோ மீற்றர் வரை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-இ)

# விபத்தில் தாய் சாவு பிள்ளைகள் காயம்

காலி, நவ.13


ஹபராதுவ, போகஹகொட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு பிள்ளைகள் காயமடைந்த நிலையில் கராபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தொரபே பகுதியில் இருந்து போகஹகொட நோக்கிய பயணித்த லொறி, மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். (வ-இ)

# பிள்ளையானின் செயலாளருக்கு விளக்கமறியல்

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர காந்தனின் செயலாளர் பூ.பிரசாந் தன், நீதிமன்ற உத்தரவின் பேரில், எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

ஆரயம்பதியில் 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படு கொலை தொடர்பில், சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்டி ருந்த அவர், பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இந் நிலையில் வழக்கின் சாட்சியங் களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் புலனாய்வுப் பிரிவினர் அவரை நேற்றுக் காலை கைதுசெய்தனர். அதன்பின்னர், மட்டக்களப்பு நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் ஏ.சி.ஏ றிஸ்வான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (வ-இ)

# முதியோரை இலக்கு வைக்கும் கொரோனா




**அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு**

கொழும்பு, நவ.13

இலங்கையில் கொவிட்-19 தொற்றால், வயோதிபர்களும் நடுத்தர வயதைச் சேர்ந்தோ ருமே அதிகளவில் உயிரிழந்து வருகின்றனர் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கடந்த சில தினங்களாக 40-50 வயதுக் குட்பட்ட பலர் கொவிட்-19 தொற்றால் ஏற்பட்ட மார டைப்பால் உயிரிழந்துள்ளனர் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. அத்துடன், வீட்டிலிருந்த நிலையில் உயிரிழந்த பலர், தொற்றா நோய்களால் பீடிக்கப்பட்டி ருந்தவர்கள் எனவும் தெரிய வருகின்றது. (ற-இ)

# சிறை அதிகாரிகளுக்கு தற்காலிக தடை!

கொழும்பு, நவ.13

இலங்கையிலுள்ள சிறைச்சாலை அதிகாரிகள் சிறைச்சாலைகளிலிருந்து வெளியேற 2 வாரங்களுக்குத் தற்கா லிகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்று பரவி வருவதை அடுத்து, வெலிகடைச் சிறைச்சாலை, கொழும் புச் சிறைச்சாலை, மெகசின் சிறைச் சாலை ஆகியவற்றின் அதிகாரிகளுக்கே இந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

வெலிகடை சிறைச்சாலை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த கைதியொருவர், கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். இனிவரும் காலங்களில் கொரோனாத் தொற்றுக் குள்ளாகும் கைதிகளை கந்தகாடு அல்லது கல்லேல்ல சிகிச்சை நிலை யங்களுக்கு அனுப்புவதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# கோத்தாவைக் கொல்ல புலிகளை அழைத்து வந்தார் பெர்னான்டோ

## ராஜித பகீர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் சவைக் கொலை செய்வதற்கு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பி னர்கள் சிலரை கொழும்புக்கு அழைத்துவந்தவர் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குற்றஞ்சாடியுள்ளார்.

கொரோனா வைரஸ் நெருக்கடி தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று விவாதம் இடம்பெற்றது.

விவாதத்துக்கு 2 மணிநேரம் வழங்கப்பட்ட போதிலும் மேலு மொரு மணித்தியாலம் வழங்கு மாறு எதிர்கட்சியினர் விடுத்த கோரிக்கை ஆளுந்தரப்பால் நிராகரிக்கப்பட்டது.

இதன்போது அமைச்சர் ஜோன்ஸ் டன் பெர்னான்டோவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கும் இடையே இடம்பெற்ற கருத்து மோதலிலேயே ராஜித இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (வ-இ)



# போகம்பறைக் கைதிகள் 250 பேருக்கு பி.சி.ஆர்

கொழும்பு, நவ.13

போகம்பறை பழைய சிறைச்சாலை யின் 250 கைதிகளுக்கு பி.சி.ஆர் பரி சோதனை செய்யப்பட்டதுடன், இவர்கள் அனைவரும் கேகாலை மற்றும் நீர்கொழும்புச் சிறைச்சா லைகளுக்கு மாற்றப்படவுள்ளனர்.

இந்த சிறைக் கைதிகள் தமது சுகாதா ரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தெரிவித்து, சிறைச்சாலைக் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டதை அடுத்தே இவர்கள் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டு வேறு சிறைகளுக்கு மாற்றப்படவுள்ளனர்.

தற்போது இந்தச் சிறையில் 810 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள னர். இவர்கள் அனைவருக்கும் விரைவாக பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்படவுள்ளது என்று சிறைச் சாலை அதிகாரியொருவர் தெரிவித் துள்ளார். (ற-இ)

# சோதனையில் சிக்கியது தீபாவளிக் கசிப்பு

ஹட்டன், நவ.13

தீபாவளியை முன்னிட்டு சட்ட விரோத மாகத் தயாரிக்கப்பட்ட கசிப்புடன் மூன்று பேர் நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெட்டபுலா ஹனு கொட்ட பகுதியில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹட்டன் கலால் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள் ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் 5ஆயிரத்து 100 லீற்றர் கசிப்பும், அதைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட உபகர ணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

தயாரிக்கப்பட்ட கசிப்பு ஒரு போத்தல் ஆயி ரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட இருந்தது என ஆரம்பகட்ட விசார ணை யில் தெரியவந்துள்ளது. (வ-இ)



# புதிய பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்க விசேட சந்திப்பு!

கொழும்பு, நவ.13

அரசின் புதிய கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக பிரதேச ரீதியாக 10 பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்ப தற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று கல்வியமைச் சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் நேற்றுக் கல்வியமைச்சில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகம் இல்லாத 10 மாவட்டங்களைத் தெரிவு செய்து அந்த மாவட்டங்களில் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கான யோசனை இதன்போது முன்வைக்கப் பட்டது. இதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதில் கலந்துரையா டப்பட்டது என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)



# பெரும்போக நெற்செய்கையில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்!

## *விவசாயப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு*

கொழும்பு, நவ.13

நாடு முழுவதும் நெற்செய்கைப் பெரும்போக மானது 8 இலட்சத்து 17 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது என்று விவசா யப் பணிப்பாளர் நாயகம் டபிள்யு. எம். டபிள்யு. வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

சிறுபோகத்தில் சிறந்த அறுவடை கிடைத்ததால் விவசாயிகள் பெரும்போகச் செய்கையில் ஆர்வம் காட்டுகின்றனர் எனவும், நெற்செய்கைக்குத் தேவை யான உரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் விவசாயப் பணிப்பா ளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.(ற-இ)

# இரு நாள்களுக்கு ரயில் சேவை ரத்து

கொழும்பு, நவ.13

இலங்கையில் அனைத்துப் பயணிகள் ரயில் சேவைகளும் நாளை மற்றும் நாளை மறுதினம் இரத்துச் செய்யப் பட்டுள்ளன என்று ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது.




இந்த இரு தினங்களும் அரச விடு முறை தினங்களாக அமைந்துள்ளமை யைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல், அனைத்து அலுவலக ரயில் சேவைகள் மற்றும் பிராந்திய ரயில் சேவைகள் ஆகியன வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளன. (ற-இ)



## மின்சார வேலியில் சிக்கி குடும்பப் பெண் உயிரிழப்பு

நுவரெலியா, நவ.13

மின்சார வேலியில் சிக்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ள சம்பவம் அக்கரபத்தனை பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பூஜைக்காக வாழையிலை வெட்ட தோட்டத் துக்கு சென்றவர் நீண்ட நேரமாக திரும்ப வராததையடுத்து அங்கு சென்று பார்த்த போது அவர் சடலமாகக் கிடந்துள்ளார்.

மிருகங்களுக்காக பொருத்தப்பட்ட சட்ட விரோத மின்சார வேலியில் சிக்கி அவர் உயி ரிழந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள் ளது. 4 பிள்ளைகளின் தாயான 65 வயதுடைய வரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (வ-இ)



## பற்றை காணியிலிருந்து மோட்டார் குண்டு மீட்பு

கொடிகாமம், நவ.13

சிறுப்பிட்டிப் பகுதியிலுள்ள பற் றைக் காணியொன்றிலிருந்து 60 எம்எம் வகையைச் சேர்ந்த மோட் டார் குண்டு ஒன்று நேற்று மாலை அச்சுவேலி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

காணியைத் துப்பரவாக்க முற்பட்ட போது குண்டு இருப்பதை அவதா னித்த காணி உரிமையாளர் அச்சு வேலி பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து அந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (வ-159)

## வீடுகளிலிருந்து கற்க புதிய வேலைத்திட்டம்

திருகோணமலை, நவ.13

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை சுகாதா ரத்துறையினரின் ஆலோசனைகளைப் பின்பற்றி வீடுகளில் இருந்தவாறே மேற்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்று திருகோணமலை வலயக்கல் விப்பணிமனையில் வலயக்கல்விப்பணிப்பாளர் சி. சிறிதரன் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, திருகோணமலை பட்டினமும் சூழ லும்,தம்பலகாமம் மற்றும் குச்சவெளி ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளிலிருந்து இம்முறை க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர் களுக்கான கையேடுகள் , மாதிரி வினாத்தாள்கள் என்பன மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்படவுள் ளன. இதற்கான நிதியுதவியை அகம் மனிதாபிமான வள நிலையம் வழங்கியுள்ளது. (வ-இ)



## சிறையிலுள்ள எம்.பிக்கள் சபைக்கு வருவதற்கு தடை

கொழும்பு, நவ.13

சிறைச்சாலைகளில் தற்போது கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், வெலிகடை மற்றும் மெகஸின் சிறைகளில் உள்ள நாடாளு மன்ற உறுப்பினர்களை சபை நடவடிக்கைக ளுக்கு அழைத்து வருவது நிறுத்தப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்க ளான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனே சதுரை சந்திரகாந்தன், பிரேமலால் ஜயசேகர மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பின ரான ரிஷாட் பதியுதீன் ஆகியோரையே சபைக் குள் அழைத்து வராமல் இருக்க தீர்மா னிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 800 கிலோ மஞ்சள் கடற்கரையில் மீட்பு!

கொழும்பு, நவ.13

கல்பிட்டியாவின் தாலுவா கடற்கரையில் 800 கிலோ நிறையு டைய உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப் பட்டதுடன், இச் சம்பவம் தொடர் பில் 6 சந்தேக நபர்களையும் கடற்ப டையினர் நேற்றுக் கைதுசெய்தனர்.

தாலுவா கடற்கரையில் கடற்படை யினர் நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத் துக்கிடமான இரண்டு டிங்கி படகுகள் சோதனையிடப்பட்டன. இதன்போது இந்த உலர்ந்த மஞ்சள் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் கல்பிட்டியாவில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் பறிமுதல்செய்யப்பட்ட மஞ்சள், டிங்கிப் படகு என்பன சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டு நாயக்க சுங்கத் தடுப்பு அலுவல கத்தில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. (ற-ரி4)

## கொழும்பில் 4 சீனர்களுக்கு கொரோனா!

கொழும்பு, நவ.13

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுவந்த 4 சீனப் பிரஜைகளுக்கு கொரோனாத் தொற்று உறு திப்படுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பி லுள்ள சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது.

தூதரகம் இதுகுறித்த அறிக்கை ஒன்றை தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதி விட்டுள்ளது. இதில் தொற்றுக்குள்ளான 4 சீனப் பிரஜைகள் உட்பட 2 இலங்கையர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-இ)

## 31 இலங்கையர்கள் நாட்டை வந்தடைவு

கொழும்பு, நவ.13


கொரோனாப் பரவல் காரணமாக வெளிநாடு களில் சிக்கியிருந்த மேலும் 31 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 20 இலங்கை யர்களும், ஜப்பான் நரிட்டோவிலிருந்து 16 இலங்கையர்களும் இவ்வாறு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். தொழில் வாய்ப்புக்காகச் சென்ற வர்களே இவ்வாறு நாட்டை வந்தடைந்தனர்.

இவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்க ளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர். (ற-இ)





## தரமான படைப்பு

*'Low Cost Airline'* என்கிற குறைந்தவிலை விமானசேவையை இந்தியர்களுக்கு அறிமுகப்படுத்திய கேப்டன் கோபிநாத்தின் வாழ்க்கைப்பயணத்தில் கொஞ்சம் உப்பு, காரம் எல்லாம் சரியான விகிதத்தில் சேர்த்து, விறுவிறுப்பான, நம்பிக்கையான, இளைஞர்களுக்கு சாதிக்கவேண்டும் என்கிற எண்ணத்தைத் தூண்டக்கூடிய படமாக சூரரைப் போற்று படத்தை எடுத்திருக்கிறார் இயக்குநர் சுதா கொங்கரா.

சூர்யா படத்தின் ஆரம்பத்திலேயே ஒரு விமானத்தை அத்துமீறி தரை இறக்குகிறார். அதிலிருந்து தொடங்குகிறது படம்.

சூர்யா நெடுமாறன் ராஜாங்கம் நினைவு எளிய மக்களையும் விமானத்தில் குறைந்த பணத்தில் பறக்க வைக்க வேண்டும் என்ற கனவுடன் போராடி வருகிறார்.

அவர் கனவுக்கு பலர் முட்டுக்கட்டை போடுகின்றனர், ஏதாவது ஒரு வழியில், அந்த நேரத்தில் விமான பிஸினஸில் கொடிக்கட்டி பறக்கும் பரேஷ் என்பவரை சூர்யா சந்தித்து தன் யோசனைகளை சொல்கிறார். சூர்யா ஒரு கிராமத்தான், அவர் எப்படி இப்படி ஒரு யோசனையை வைத்துக்கொண்டு சுத்தலாம், என்று பரேஷ் திட்டம் போட்டு அவர் கனவை தவிடு பொடியாக்குகிறார்.

இத்தனை பெரிய பிஸினஸ் மலையை தாண்டி சூர்யா எப்படி தன் விமானத்தை இந்த வானில் பறக்க வைக்கிறார் என்பதே படத்தின் கதை.

'வாரணம் ஆயிரம்' சூர்யாவை மீண்டும் பார்த்ததுபோல் இருக்கிறது. நெடுமாறன் ராஜாங்கமாக நடிப்பில் ஒரு ராஜாங்கமே நடத்தியிருக்கிறார். கொடுமை கண்டு பொங்கி எழுந்து பக்கம் பக்கமாக பன்ச் டய லாக் பேசும் சூர்யா வைப் படத்தின் ஒரு பிரேமிலும் பார்க்க முடியாது. கையில் அருவா, வேல் கம்பு, கத்தி, துப்பாக்கி என எதுவும் கிடையாது. நான் இதைச் சொல்லியே ஆகணும் என்று ரொமான்ஸிலும் ஒரே மாதிரியான சூர்யாவைப் பார்க்க முடியாது. அழுதுகொண்டே தன் இயலாமையை, ஆற்றாமையை, கையறு நிலையை வெளிப்படுத்தும் சூர்யாவைப் பார்க்க முடிகிறது.

சூர்யாவின் உழைப்பும், அவரது அர்ப்ப ணிப்பும் இந்தமுறை படத்தில் தெரிகிறது.

"நீங்க தோத்துட்டீங்கப்பா..." என முகத்துக்கு நேராக விமர்சிக்கும் மகனிடம் கோபப்பட்டு கைநீட்டும் காட்சியில் 'பூ' ராமுவும், அம்மா ஊர்வசியும் தாங்கள் எப்பேர்பட்ட தேர்ந்த நடிகர்கள் என்பதை நிரூபிக்கிறார்கள். அந்த மூன்று நிமிட காட்சி கண்களை கலங்கடிக்கிறது!

ஹீரோயின் பொம்மியாக அபர்ணா. சூர்யா எப்போதும் கடித்து தின்ன ஆசைப்படும் 'பன்'போலவே இருக்கிறார். வழக்கமான தமிழ் சினிமா லூசுப்பெண் கதாபாத்திரம் இல்லை அபர்ணாவுக்கு. நடிப்பையும், நம்பிக்கையையும் கண்களில் கடத்தியிருக்கிறார் அபர்ணா...



ராணுவ உயரதிகாரியாக நடித்திருக்கும் மோகன்பாபு சில நிமிடங்களே படத்தில் வந்தாலும் இறுதியில் ராயல் சல்யூட் அடிக்கவைக்கிறார். பிக்பாஸ் சீசன் 4 போட்டியாளர் சோம் கூட ஒரு காட்சியில் வந்துவிட்டுப்போகும் அளவுக்குப் படத்தின் ஸ்டார்காஸ்ட் அவ்வளவு ட்ரெண்டிங்கில் இருக்கிறது. பாடல்கள் எந்த இடத்திலும் படத்தின் வேகத்துக்குத் தடையாக இல்லை என்பதோடு, பின்னணி இசையிலும் பிரமாதப்படுத்தியிருக்கிறார் ஜி.வி.பிரகாஷ்.

படத்தில் பல இடங்களில் கண்ணீர் சிந்தவைக்கும், உணர்ச்சிவசமான காட்சிகள் இடம்பெற்றுள்ளன. கோபிநாத் ஒரு விமான நிறுவனத்தை துவங்குவதற்கு முன்பு எதிர்கொண்ட பிரச்சனைகள், சினிமாவுக்கு ஏற்றபடி மாற்றப்பட்டிருக்கின்றன. இந்தச் சின்னச் சின்ன பிரச்சனைகளை விட்டுவிட்டால், ஒரு ரசிக்கத்தக்க படம் இது.

கேப்டன் கோபிநாத்தின் சுயசரிதையான *Simply Fly A Deccon odyssey* மிக விறுவிறுப்பான புத்தகம். ஒரு சுயசரிதை என்னதான் சுவாரஸ்யமாக இருந்தாலும் சரி, அதை சினிமாவாக மாற்றும்போது சுவாரஸ்யமாக இருக்குமென உத்தரவாதம் கொடுக்க முடியாது. ஆனால், சுதா கொங்கரா அதை இந்தப் படத்தில் செய்திருக்கிறார்.

ஒரு முன்னணி நட்சத்திர நடிகர் ஓடிடியில் படத்தை வெளியிடுவது துணிச்சல் என்றால், அதிலும் பரிசோதனை முயற்சிக்குத் தன்னை ஒப்புக் கொடுத்திருப்பது வேற லெவல். சூர்யாவின் இந்த முயற்சிகள் என்றும் தொடர வரவேற்போம். மொத்தத்தில், சூரரை போற்று மட்டுமல்ல, பரிசோதனை முயற்சிக்காக சூர்யாவையும், மேக்கிங் மூளைக்காக சுதா கொங்கராவையும் போற்றலாம்.

சூர்யா, சுதாவின் 'சூரரைப் போற்று' 2020வில் தமிழ் சினிமாவுக்கு நம்பிக்கைத்தந்திருக்கும் தரமான படைப்பு.

## ஜெயம் ரவியின் பூமி பொங்கலுக்கு?

ஜெயம் ரவி நடித்துள்ள படம் 'பூமி'. இதில் நிதி அகர்வால் அவரது ஜோடியாக நடித்துள்ளார்.

சரண்யா பொன்வண்ணன், சதீஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள னர். இது ஜெயம் ரவியின் 25வது படமாகும்.

பூமி விவசாயிகளின் பிரச்சினைனயை பேசும் படம் என்பதால் அதனை பொங்க லுக்கு வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்று ஜெயம்ரவி சொன்ன கருத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

தற்போது பொங்கல் தினத் தன்று ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தி லும், அதன் பிறகு விஜய் டிவியிலும் ஒளி பரப் பாக இருக்கின்றது எனத் தகவல் கள் வெளியாகி உள்ளது. விரைவில் இதற்கான அதி காரபூர்வமான அறிவிப்பு வெளியிடப்பட இருக்கிறது.



## மைக்கேல் ஜாக்சனாக மாறிய தனுஷ் வைரலாகும் புஜ்ஜி பாடல்



கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள படம் 'ஜகமே தந்திரம்'. இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். ஏற்கனவே வெளியான ரகிட ரகிட பாடல் பட்டி தொட்டியெங்கும் சூப்பர்ஹிட் ஆனது.

இந்நிலையில், இப்படத்தில் இடம்பெறும் புஜ்ஜி என்ற பாடலை படக்குழு இன்று வெளியிட்டுள்ளது. அனிருத் இப்பாடலை பாடியுள்ளார். பாடல் வரிகளை விவேக் எழுதியுள்ளார். இப்பாடல் வீடியோ ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. முழுக்க முழுக்க வெளிநாட்டில் படமாக்கப்பட்டுள்ள இப்பாடலில் மறைந்த பிரபல பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சனின் நடன அசைவுகளுக்கு தனுஷ் ஆடுவது போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

## சந்தியான் ஆச்சிரமத்துக்கு “சீல்”

*யாழ்ப்பாணம், நவ.13*
கொரோனா சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டது என்று தெரிவித்து செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் இன்று சுகாதாரப் பகுதியினராலும், பொலிஸாரும் “சீல்” வைக்கப்பட்டது.
சுகாதார நடைமுறைகளை மீறி அங்கு இன்று அன்னதானம் வழங்கப்பட்டது என்று தெரிவித்தே ஆச்சிரமம் “சீல்” வைக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பகுதியினரும், வல்வெட்டித்துறைப் பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். (எ-26)



## பாதையில் மூடைகள்; சமூக இடைவெளியை பின்பற்றுவதில் சிரமம்

*கொடிகாமம், நவ.13*
கொடிகாமம் சந்தையில் நுகர்வோருக்குரிய நடைபாதையில் வியாபாரிகள் மரக்கறி மூடைகளை வைப்பதால் சமூக இடைவெளியைப் பின்பற்றுவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இது தொடர்பில் சாவகச்சேரி பிரதேச சபைக்கு அறி விக்கப்பட்டு சபையின் உப தவிசாளர் வி.மயூரன் நேரில் சென்று நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனாலும் சில நாள்களில் இந்த நிலை மீளத் தொடரும் என மக்கள் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (வ-26)

## உடல்களின் நல்லடக்கம்...

பிரதிநிதியுமான ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.
கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவது தொடர்பில் முஸ்லிம் சமூகம் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. அதற்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.
இந்த விடயம் தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு, ஐ.நா.அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதியான ஹனா சிங்கர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
தொற்று நோயால் இறந்தவர்கள் மூலம் வைரஸ் பவவுவதைத் தடுப்பதற்கு, அந்த உடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டும் என்ற பொதுவான அனுமானம், ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்படவில்லை. தகனம் என்பது அவரவர் கலாசார தேர்வுகளை அடிப்படையாக கொண்டவை என்று அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும்போது, சிறுபான்மையினரின் உரிமைகளை அரசு மதிக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.
கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை அரசு பின்பற்ற வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## கொரோனாவை எதிர்க்க...

வரும் ஒருவர் சமூக வலைத்தளம் ஊடாகத் தனது அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
“நான் கடந்த 7 நாள்களாகச் சிகிச்சை பெறுகின்றேன். இன்னும் 7 நாள்களில் வீட்டுக்குச் சென்றுவிடுவேன். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நாள் முதல் எனக்கு எந்த மருந்துகளும் தரப்படவில்லை. சூடான பானம் மட்டுமே வழங்கப்படுகின்றது. தலைவலிக்கு மட்டும் பரசிட்டமோல் மாத்திரை வழங்கப்படுகின்றது” என்று தெரிவித்துள்ளார் அவர்.
“விசேடமாகச் சுடு நீரில் உப்பு சேர்த்துத் தொண்டை கழுவப்படுகின்றது. அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை ஏதேனும் ஒரு பானத்தைப் பருக வேண்டும். அது கஞ்சி, தேநீர், கொத்தமல்லி அவித்த நீர், சுடு நீர் என்று எந்தப் பானமாகவும் இருக்கலாம்.
நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 முறை ஆவி பிடிக்க வேண்டும். ஆவி பிடிக்கும்போது ஒரு முறை மூக்கால் சுவாசித்து வாயால் ஆவியை வெளியேற்ற வேண்டும். அடுத்தமுறை வாயால் உள்ளிழுத்து மூக்கால் வெளியேற்ற வேண்டும்.
30 நிமிடங்களுக்கு ஒரு முறை சவர்க்காரமிட்டு நன்கு கைகளைக் கழுவ வேண்டும். செனிடைஸர் பயன்படுத்துவதற்கு பதிலாக சவர்க்காரம் பயன்படுத்துவது சிறந்தது.
உங்களுக்கு கொரோனா தொற்றும் என்ற சந்தேகம் இருந்தால், உங்களுக்கான தனியான சவர்க்காரம், துடைப்பான் மற்றும் நீங்கள் பயன்படுத்தும் பொருள்களை தனியாக வைத்துக் கொள்ளுங்கள்.
நாங்கள் உணவு உட்கொள்ளும் நேரத்தை தவிர்த்து ஏனைய அனைத்து சந்தர்ப்பத்திலும் முகக் கவசம் அணிந்திருப்போம். உறங்கும் போதும் அணிந்திருப்போம். ஒரு நாளில் 3 முகக் கவசங்கள் மாற்றுவோம்.
கொரோனா தொற்றிய பின்னர் மனதளவில் தைரியத்துடன் இருக்க வேண்டும். அதுவே கொரோனாவுடன் போராடுவதற்கான சிறந்த ஆயுதமாகும்” என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

பருவப்பெயர்ச்சி மழை;

## அனர்த்த நிலையை எதிர்கொள்ள முல்லைத்தீவு தயார் நிலையில்

*முல்லைத்தீவு, நவ.13*
முல்லைத்தீவில் வடக்கு கிழக்கு பருவப்பெயர்ச்சி மழையால் அனர்த்தம் ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்வதற்கு முப்படையினர் உள்ளிட்ட அரச அரச சார்பற்ற திணைக்களத்தினர் தயார் நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகா மைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் இ.இலிங்கேஸ்வரகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதில், விவசாய நீர்பாசனத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் செயலாளர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற திணைக்கள அதிகாரிகள் முப்படையினர் உள்ளிட்ட அனர்த்த முன்னாயத்தம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளனர். (வ-19)



## பவித்திராவுக்கு எதிரான தீர்மானம் வந்தால் பதிலடி

### ஜகத் குமார எம்.பி. தெரிவிப்பு

முடிந்தால் சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரட்டும். மூன்றிலிரண்டு பெரும்பான்மைபலத்துடன் தக்க பதிலடி கொடுக்கப்படும். இவ்வாறு ஆளுங்கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்ட முதலாவது அலையை ஜனாதிபதி, பிரதமர் , சுகாதார மற்றும் பாதுகாப்பு தரப்பினர் இணைந்து உரியவகையில் கட்டுப்படுத்தினர். சுகாதார அமைச்சரும் தீவிரமாக செயற்பட்டார். தற்போதுகூட வைரஸ் பரவலைக்கட்டுக்குள்தான் வைத்துள்ளோம். கொரோனாவை வைத்து சுகாதார அமைச்சரோ, அரசாங்கமோ அரசியல் செய்யவில்லை. மக்களை பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலேயே ஆராயப்பட்டுவருகின்றது. நாம் ஆன்மீகத்தையும் நம்புகின்றோம். அந்த வகையிலேயே கங்கையில் சுகாதார அமைச்சர் மண்குடத்தைப் போட்டார். அது மதம் மீதுள்ள நம்பிக்கையாகும்.

ஆனால் அதனைக்கூட எதிரணியினர் கொச்சைப்படுத்துகின்றனர். சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் எனக் கூறுகின்றனர். முடிந்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருமாறு நான் சவால் விடுக்கின்றேன். அவ்வாறு பிரேரணைவந்தால் அதனை எதிர்கொண்டு தோற்கடிப்பதற்கு அரசாங்கம் தயார். மக்களும் உரிய பதிலடியைக் கொடுப்பார்கள். என்றார். (எ-44)



கொரோனாத் தொற்றின் தாக்கத்திலிருந்து மக்கள் விடுபட வேண்டி கிளிநொச்சி கந்தன்குளம் செல்வாநகர் ஓம் சக்திவேலன் ஆலயத்தில் விசேட பிரார்த்தனையும் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமமும் அண்மையில் இடம்பெற்றது. (வ-159)